MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T90R0

நோயாளி தகவல் கையேடு

# ஆன்டிபயோடிக் மருந்துகள்
## (ANTIBIOTICS)

கோ-ட்ரைமோக்ஸசோல் (Co-trimoxazole)
டாப்சோன் (Dapsone)
AprimItftAm[f (Pyrimethamine)
ட்ரைமீத்தோப்ரிம் (Trimethoprim)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

## கோ-ட்ரைமோக்ஸசோல் (Co-trimoxazole), டாப்சோன் (Dapsone), பைரிமீத்தமைன் (Pyrimethamine) மற்றும் ட்ரைமீத்தோப்ரிம் (Trimethoprim) என்பவை ஆன்டிபயோடிக் மருந்துகளாகும். இவை நுண்ணுயிர்த் தொற்றுகளைத் தடுக்கவும், அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

### மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

தொற்றின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். மருத்துவர் கூறும் அளவில் இந்த மருந்துகளை உட்கொள்ளுங்கள்.

இந்த மருந்துகளை வெறும் வயிற்றில் எடுக்கலாம். வயிறு பாதித்தால், மருந்தை உணவுடன் எடுக்கலாம். ஒவ்வொரு வேளை மருந்தையும் ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள்.

மருந்து எடுக்கத் தொடங்கிய சில நாட்களில் குணம் தெரிய ஆரம்பித்தாலும், கொடுக்கப்படும் மாத்திரைகள் எல்லாவற்றையும் முடித்துவிடுங்கள். ஏனெனில், கிருமித்தொற்று முழுமையாக நீங்குவதற்கு முன்பே அறிகுறிகள் மேம்பட ஆரம்பிக்கலாம்

### மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்து அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

### இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

குமட்டல், வாந்தி போன்ற இரைப்பைசிறுகுடல் பாதிப்புகளும், தோல் தடிப்புகளும் ஏற்படலாம். தோல் தடிப்புகள் அல்லது தோல் அரிப்பு இருந்தால் உடனே மருத்துவரைப் பாருங்கள்

சிறுநீர் மற்றும்/அல்லது மலத்தில் இரத்தம் காணப்படுதல், அல்லது ஈறுகளில் இரத்தம் வருதல் போன்ற மற்ற பக்க-விளைவுகள் இருக்கலாம். தோல் உரிதல், காய்ச்சலுடன் கூடிய அல்லது காய்ச்சலில்லாத இடைவிடாத வயிற்றுப்போக்கு போன்றவையும் ஏற்படலாம். இவை இருந்தால் உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

இம்மருந்துகள் சூரிய ஒளியில் தோலை பாதிப்படையச் செய்யலாம். சூரிய ஒளி தோலில் படும்போது தோல் தடிப்புகள், அரிப்பு, தோல் சிவத்தல் அல்லது கருகுதல் ஏற்படலாம். குறைந்தது 15 அளவுடைய தோல் பாதுகாப்பு காரணி (ஸகிந பரஒதசெதிஒந ாசதஒர) உள்ள சூரியக் கதிர்த் தடுப்பு களிம்பைப் பயன்படுத்துங்கள், மற்றும் வெய்யில் அதிகமாக இருக்கும் காலை 10 மணியிலிருந்து மதியம் 3 மணி வரை வெளியில் செல்லாதீர்கள்.

### நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்

- வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால்.
- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும் ஈ முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால்.
- இரத்தச்சோகை, கல்லீரல் நோய், சிறுநீரக நோய், வலிப்பு நோய், அல்லது டீ6கூடு குறைபாடு இருந்தால். இவை பக்க-விளைவுகள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

### மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.